<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 73/2025</u>

<u>10.06.2026</u>

<u>LW : 13 PW : 13</u>

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**<u>திரு. பன்னீர்செல்வம், த/பெ. குழந்தைவேலு</u>**

**<u>எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>சாட்சி பன்னீர்செல்வத்தை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணையின் தொடர்ச்சி</u>**

**<u>கையாடல் இனம் 15</u>**

சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் பணம் பெறவேண்டியவரிடம் கையொப்பம் பெறாமல் தொகை வழங்கப்பட்டதாக பற்று எழுதி ரூ.62,000/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

04.10.2013 ல் பெயர் 2941.வி. கௌதமன் தனக்காக ரூ.22,000/- பெற்றார் என எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்ட பற்றுச்சீட்டு உள்ளது. அதில் வவுச்சர் எண்.1484 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த பற்றுச்சீட்டில் கணக்கு வைத்திருப்பவர் அதாவது வி. கௌதமன் கையொப்பம் இடவில்லை. அவ்வாறே அந்த பற்றுச்சீட்டின் பின்புறம் கணக்கு வைத்திருப்பவர் அல்லது பணம் பெறுபவரின் கையொப்பம் என்ற இடத்தில் எவர் ஒருவரும் கையொப்பம் இடவில்லை. இவற்றால் இவ்வினத்தில் 04.10.2013 ந் தேதியில் துணைதினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு பக்கம் எண்.13 ல் ரொக்கப்புத்தகம் பக்கம் 48 ல் பற்று எழுதி சங்க நிதியில் இவ்வினத்தில் ரூ.22,000/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.87 04.10.2013 ல் பெயர் 2941.வி. கௌதமன் ரூ.22,000/- என்ற பணம் எடுக்கும் சீட்டு அ.த.சா.ஆ.142 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.15 04.10.2013 ந் தேதியில் துணைதினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு பக்கம் எண்.13 அ.த.சா.ஆ.143 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண். 7 ரொக்கப்புத்தகம் பக்கம் 48 அ.த.சா.ஆ.144 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பற்றுச்சீட்டில் தேதி குறிப்பிடப்படவில்லை. பெயர் 3033 கே. நீலாவதி தனக்காக ரூ.40,000/- மட்டும் என எழுத்தாலும், எண்ணாலும் எழுதப்பட்டுள்ளது. கணக்கு வைத்திருப்பவர் கையெழுத்து என்ற இடத்தில் உள்ள கையெழுத்து கே. நீலாவதி கையெழுத்து இல்லை. அந்த பற்றுச்சீட்டின் பின்புறம் கணக்கு வைத்திருப்பவர் என

முன்பக்கத்தில் கையெழுத்திட்டுள்ள அந்த நபர் கையொப்பம் இடவில்லை. இவ்வாறு பணம் பெறுபவரின் கையொப்பம் என்ற இடத்தில் கே. நீலாவதி என்பவர் கையொப்பம் இடவில்லை. ஆனால் இந்த பற்றுச்சீட்டு துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு நாள் 11.10.2013 ல் பக்கம் எண்.18 ல் பற்று எழுதப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.54 ல் பற்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறாக இவ்வினத்தில் ரூ.40,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.87 பெயர் 3033 கே. நீலாவதி ரூ.40,000/- என்ற பணம் எடுக்கும் சீட்டு அ.த.சா.ஆ.145 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.15 11.10.2013 ந் தேதியில் துணைதினக்குறிப்பு பற்றுக்கணக்கு பேரேடு பக்கம் எண்.18 அ.த.சா.ஆ.146 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண். 7 ரொக்கப்புத்தகம் பக்கம் 54 அ.த.சா.ஆ.147 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஆக கூடுதல் ரூ.62,000/- இவ்வினத்தில் சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 84 ன் படி முறையாக கணக்கு எழுதுவதை உறுதி செய்துவரவேண்டியது எதிரி 1 தினகரனின் தலையாய கடமையாகும். இதனையே வலியுறுத்தி சங்க தனி அலுவலர் 05.08.2011 ல் நிர்ணயித்துக் கொடுத்துள்ள கடமைகளும் பொறுப்புகளையும் பற்றிய ஆணைய இவர் 05.08.2011 ல் பெற்றுள்ளார் என்பதுடன் அந்த ஆணையில் சங்க எழுத்தர் வி.குமார் என்பவருக்கு துணை தினக்குறிப்பு பற்று மற்றும் வரவு பேரேடுகளையும் மற்றும் ரொக்கப்புத்தகத்தையும் எழுதி வரவேண்டும் என திட்டவட்டமாக இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளதை எதிரி 3 வி.குமார் செயல்படுத்த தவறியுள்ளார்.

இதுகுறித்து எதிரி 1 தினகரனை விசாரித்தபோது அவர் தனது வாக்குமூலம் 07.07.2015 ல் பக்கம் எண்.3 ல் வி.குமார் வரவு செலவுப் பதிவேடுகளை எழுதவில்லை ஏனெனில் தான் சொன்ன வேலைகளை அவர் செய்ய முன்வரவில்லை எனவும், துணைதினக்குறிப்பு பேரேடுகளை தினப்பேரேடு (ரொக்கப்புத்தகம்) ஆகியவற்றை எழுதவில்லை என்பது குறித்து எழுத்தர் வி.குமார் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை தனது வாக்குமூலம் பக்கம் எண்.4 ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், சங்கத்தில் பணியாற்றும் இதர இரண்டு எழுத்தர்களும் தனது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருவார்கள் என்பதும் அவர்களது பணிகளை கண்காணித்து வருவதும் தனது பொறுப்பு என்பது தனக்கு தெரியும் என பக்கம் எண்.2 ல் ஒப்புக்கொண்டுள்ள இவர் எழுத்தர் வி.குமார் தனி அலுவலரின் ஆணையை செயல்படுத்த மறுத்திருப்பாரேயானால், அது குறித்து சங்க தலைவருக்கு குறிப்பு எழுதி அனுப்பி இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க எழுத்துமூலமாக பரிந்துரை

செய்து சங்க தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க இவர் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு எதிரி தினகரன் செயல்பட தவறியுள்ளார் என்பதையும் தனது 07.07.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்கம் எண்.8 ல் தனக்கு வேண்டிய நபரைக் கொண்டு துணைதினக்குறிப்பு பேரேடு வரவு கணக்கு மற்றும் பற்றுப்பேரேடு கணக்குகளையும் எழுதச் செய்துள்ளேன் எனவும், அதனால் தான் எவர் ஒருவரும் அதில் கையொப்பம் இடவில்லை என்பதும், தானும் அதில் கையொப்பம் இடவில்லை எனவும், பக்கம் எண்.9 ல் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் துணை தினக்குறிப்பு பேரேடு வரவு மற்றும் பற்று பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் ரொக்கப்புத்தகத்தை எழுதி முடித்து எதிரி 1 தினகரன் கையொப்பமிட்டுள்ளார். இவற்றால், இவர் சங்கத்தின் ரொக்கப்புத்தகத்தின் வரவுசெலவுகளை தனி அலுவலர் ஆணைப்படி கூட்டுப்பொறுப்பாக செயல்படுத்தாமல், இவர் இவரது தனி பொறுப்பாக செயல்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பாக எதிரி 1 தினகரனை விசாரித்ததில் அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ல் பக்கம் எண்.51 ல் சேமிப்பு கணக்கு பேரேடு முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதையும், இந்த தொகை ரூ.62,000/- ஐ தான் கையாடல் செய்துள்ளார் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். இவற்றால் எதிரி தினகரன் இவ்வினத்தில் ரூ.62,000/- கையாடல் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது.

**<u>கையாடல் இனம் 16</u>**

சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் சேமிப்பு கணக்குதாரர் கோரிய தொகையை திருத்தி அதிகத் தொகை கொடுக்கப்பட்டதாக பொய் கணக்கு எழுதி கையாடல் செய்யப்பட்டுள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள 6 இனங்களிலும் அந்தந்த சேமிப்பு கணக்குதாரர்கள் கொடுத்த பற்றுச்சீட்டுகளில் உள்ள தொகைகளை திருத்தி திருத்தங்களுக்கு அந்தந்த சேமிப்பு கணக்குதாரர்கள் கையொப்பம் இல்லாத போதும் அதை அனுமதித்து சங்க துணைதினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு மற்றும் ரொக்கப்புத்தகத்தில் திருத்தப்பட்ட தொகையை பற்று எழுதி சங்க நிதியில் ரூ.1,40,000/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

11.11.2013 ல் எம். கலியமூர்த்தி என்பவரின் உறுப்பினர் சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் கோரியுள்ள தொகை ரூ.25,000/- ஆகும். ஆனால் இந்த பற்றுச்சீட்டில் உள்ள இந்த

தொகையான ரூ.25,000/- க்கு பதிலாக ரூ.35,000/- என அதிகமாக துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.38 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 ல் பற்று எழுதி ரூ.10,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சேமிப்பு கணக்குதாரர் எம்.கலியமூர்த்தி 19.05.2015 ந் தேதியில் கொடுத்துள்ள தனது வாக்குமூலத்தில் தான் கொடுத்த பற்றுச்சீட்டின் படி ரூ.25,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும், துணைதினக்குறிப்பு பேரேடு குறிப்பிட்டுள்ள ரூ.35,000/- தான் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். **வரிசை எண்.87 11.11.2013 ல் எம். கலியமூர்த்தியின் பணம் எடுக்கும் சீட்டு தொகை ரூ.25,000/- அ.த.சா.ஆ.148 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.15 துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.38 தொகை ரூ.35,000/- அ.த.சா.ஆ.149 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 அ.த.சா.ஆ.150 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11.11.2013 ல் ஆர். ராக்கையன் என்பவரின் உறுப்பினர் சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் கோரியுள்ள தொகை ரூ.25,000/- ஆகும். ஆனால் இந்த பற்றுச்சீட்டில் உள்ள இந்த தொகையான ரூ.25,000/- க்கு பதிலாக ரூ.30,000/- என அதிகமாக துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.38 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 ல் பற்று எழுதி ரூ.5,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சேமிப்பு கணக்குதாரர் ஆர். ராக்கையன் 19.05.2015 ந் தேதியில் கொடுத்துள்ள தனது வாக்குமூலத்தில் தான் கொடுத்த பற்றுச்சீட்டின் படி ரூ.25,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும், துணைதினக்குறிப்பு பேரேடு குறிப்பிட்டுள்ள ரூ.30,000/- தான் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். **வரிசை எண்.87 11.11.2013 ல் ஆர். ராக்கையன் பணம் எடுக்கும் சீட்டு தொகை ரூ.25,000/- அ.த.சா.ஆ.151 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.15 துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.38 தொகை ரூ.30,000/- அ.த.சா.ஆ.152 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 அ.த.சா.ஆ.135 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **ஆர். ராக்கையனின் வாக்குமூலம் அ.த.சா.ஆ.153 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11.11.2013 ல் ஆர். இந்திராகாந்தி என்பவரின் உறுப்பினர் சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் கோரியுள்ள தொகை ரூ.25,000/- ஆகும். ஆனால் இந்த பற்றுச்சீட்டில் உள்ள இந்த தொகையான ரூ.25,000/- க்கு பதிலாக ரூ.30,000/- என அதிகமாக

துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.38 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 ல் பற்று எழுதி ரூ.5,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சேமிப்பு கணக்குதாரர் ஆர். இந்திராகாந்தி 19.05.2015 ந் தேதியில் கொடுத்துள்ள தனது வாக்குமூலத்தில் தான் கொடுத்த பற்றுச்சீட்டின் படி ரூ.25,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும், துணைதினக்குறிப்பு பேரேடு குறிப்பிட்டுள்ள ரூ.30,000/- தான் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். **வரிசை எண்.87 11.11.2013 ல் ஆர். இந்திராகாந்தி பணம் எடுக்கும் சீட்டு தொகை ரூ.25,000/- அ.த.சா.ஆ.154 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.15 துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.38 தொகை ரூ.30,000/- அ.த.சா.ஆ.155 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.65 அ.த.சா.ஆ.135 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **ஆர். இந்திராகாந்தி வாக்குமூலம் அ.த.சா.ஆ.156 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13.11.2013 ல் என்.ஹரிணி என்பவரின் உறுப்பினர் சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் கோரியுள்ள தொகை ரூ.4,000/- ஆகும். ஆனால் இந்த பற்றுச்சீட்டில் உள்ள இந்த தொகையான ரூ.4,000/- க்கு பதிலாக ரூ.44,000/- என அதிகமாக துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.39 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.66 ல் பற்று எழுதி ரூ.40,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சேமிப்பு கணக்குதாரர் என்.ஹரிணி 19.05.2015 ந் தேதியில் கொடுத்துள்ள தனது வாக்குமூலத்தில் தான் கொடுத்த பற்றுச்சீட்டின் படி ரூ.4,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும், துணைதினக்குறிப்பு பேரேடு குறிப்பிட்டுள்ள ரூ.44,000/- தான் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். வரிசை எண்.87 13.11.2013 ல் என்.ஹரிணி பணம் எடுக்கும் சீட்டு தொகை ரூ.4,000/- அ.த.சா.ஆ.27 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.39 தொகை ரூ.44,000/- அ.த.சா.ஆ.157 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.66 அ.த.சா.ஆ.158 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13.11.2013 ல் டி.கன்னிகா என்பவரின் உறுப்பினர் சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் கோரியுள்ள தொகை ரூ.4,000/- ஆகும். ஆனால் இந்த பற்றுச்சீட்டில் உள்ள இந்த தொகையான ரூ.4,000/- க்கு பதிலாக ரூ.44,000/- என அதிகமாக துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.39 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.66 ல் பற்று

எழுதி ரூ.40,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சேமிப்பு கணக்குதாரர் டி.கன்னிகா 19.05.2015 ந் தேதியில் கொடுத்துள்ள தனது வாக்குமூலத்தில் தான் கொடுத்த பற்றுச்சீட்டின் படி ரூ.4,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும், துணைதினக்குறிப்பு பேரேடு குறிப்பிட்டுள்ள ரூ.44,000/- தான் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். வரிசை எண்.87 13.11.2013 ல் என்.ஹரிணி பணம் எடுக்கும் சீட்டு தொகை ரூ.4,000/- அ.த.சா.ஆ.29 ஆக ஏற்கனவே CC 73/2025 குறியீடு செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.39 தொகை ரூ.44,000/- அ.த.சா.ஆ.159 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.66 அ.த.சா.ஆ.143 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **டி.கன்னிகாவின் வாக்குமூலம் அ.த.சா.ஆ.160 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13.11.2013 ல் ஜி. சுகந்தி என்பவரின் உறுப்பினர் சேமிப்பு கணக்கு பற்றுச்சீட்டில் கோரியுள்ள தொகை ரூ.4,000/- ஆகும். ஆனால் இந்த பற்றுச்சீட்டில் உள்ள இந்த தொகையான ரூ.4,000/- க்கு பதிலாக ரூ.44,000/- என அதிகமாக துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.39 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.66 ல் பற்று எழுதி ரூ.40,000/- சங்க நிதியில் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சேமிப்பு கணக்குதாரர் ஜி. சுகந்தி 21.05.2015 ந் தேதியில் கொடுத்துள்ள தனது வாக்குமூலத்தில் தான் கொடுத்த பற்றுச்சீட்டின் படி ரூ.4,000/- மட்டும் தான் பெற்றுக்கொண்டதாகவும், துணைதினக்குறிப்பு பேரேடு குறிப்பிட்டுள்ள ரூ.44,000/- தான் பெறவில்லை என்று தெரிவித்துள்ளார். **வரிசை எண்.87 13.11.2013 ல் ஜி. சுகந்தி பணம் எடுக்கும் சீட்டு தொகை ரூ.4,000/- அ.த.சா.ஆ.161 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.15 துணைத்தினக்குறிப்பு பற்று கணக்கு பேரேடு பக்கம் எண்.39 தொகை ரூ.44,000/- அ.த.சா.ஆ.162 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.66 அ.த.சா.ஆ.143 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **ஜி. சுகந்தியின் வாக்குமூலம் அ.த.சா.ஆ.163 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**ஆக கூடுதல் ரூ. 1,40,000/- இவ்வினத்தில் கையாடல் செய்யப்பட்டுள்ளது.** சட்டப்பிரிவு 84 ன் படி முறையாக கணக்கு எழுதுவதை உறுதி செய்துவரவேண்டியது எதிரி 1 தினகரனின் தலையாய கடமையாகும். இதனையே வலியுறுத்தி சங்க தனி அலுவலர் 05.08.2011 ல் நிர்ணயித்துக் கொடுத்துள்ள கடமைகளும் பொறுப்புகளையும் பற்றிய ஆணைய இவர் 05.08.2011 ல் பெற்றுள்ளார் என்பதுடன் அந்த ஆணையில் சங்க எழுத்தர் வி.குமார் என்பவருக்கு துணை தினக்குறிப்பு பற்று மற்றும் வரவு பேரேடுகளையும் மற்றும்

ரொக்கப்புத்தகத்தையும் எழுதி வரவேண்டும் என திட்டவட்டமாக இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளதை எதிரி 3 வி.குமார் செயல்படுத்த தவறியுள்ளார்.

இதுகுறித்து எதிரி 1 தினகரனை விசாரித்தபோது அவர் தனது வாக்குமூலம் 07.07.2015 ல் பக்கம் எண்.3 ல் வி.குமார் வரவு செலவுப் பதிவேடுகளை எழுதவில்லை ஏனெனில் தான் சொன்ன வேலைகளை அவர் செய்ய முன்வரவில்லை எனவும், துணைதினக்குறிப்பு பேரேடுகளை தினப்பேரேடு (ரொக்கப்புத்தகம்) ஆகியவற்றை எழுதவில்லை என்பது குறித்து எழுத்தர் வி.குமார் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை தனது வாக்குமூலம் பக்கம் எண்.4 ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், சங்கத்தில் பணியாற்றும் இதர இரண்டு எழுத்தர்களும் தனது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருவார்கள் என்பதும் அவர்களது பணிகளை கண்காணித்து வருவதும் தனது பொறுப்பு என்பது தனக்கு தெரியும் என பக்கம் எண்.2 ல் ஒப்புக்கொண்டுள்ள இவர் எழுத்தர் வி.குமார் தனி அலுவலரின் ஆணையை செயல்படுத்த மறுத்திருப்பாரேயானால், அது குறித்து சங்க தலைவருக்கு குறிப்பு எழுதி அனுப்பி இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க எழுத்துமூலமாக பரிந்துரை செய்து சங்க தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க இவர் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு எதிரி தினகரன் செயல்பட தவறியுள்ளார் என்பதையும் தனது 07.07.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்கம் எண்.8 ல் தனக்கு வேண்டிய நபரைக் கொண்டு துணைதினக்குறிப்பு பேரேடு வரவு கணக்கு மற்றும் பற்றுப்பேரேடு கணக்குகளையும் எழுதச் செய்துள்ளேன் எனவும், அதனால் தான் எவர் ஒருவரும் அதில் கையொப்பம் இடவில்லை என்பதும், தானும் அதில் கையொப்பம் இடவில்லை எனவும், பக்கம் எண்.9 ல் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் துணை தினக்குறிப்பு பேரேடு வரவு மற்றும் பற்று பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் ரொக்கப்புத்தகத்தை எழுதி முடித்து எதிரி தினகரன் கையொப்பமிட்டுள்ளார். இவற்றால், இவர் சங்கத்தின் ரொக்கப்புத்தகத்தின் வரவுசெலவுகளை தனி அலுவலர் ஆணைப்படி கூட்டுப்பொறுப்பாக செயல்படுத்தாமல், இவர் இவரது தனி பொறுப்பாக செயல்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பாக எதிரி தினகரனை விசாரித்ததில் அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ல் பக்கம் எண்.51 ல் சேமிப்பு கணக்கு பேரேடு முறையாக பராமரிக்கப்படவில்லை என்பதையும், பக்கம் எண்.52 ல் இந்த 6 நபர்களின் பற்றுச்சீட்டுகளை திருத்தி ரூ.1,40,000/- கையாடல் செய்துள்ளேன்

என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். இவற்றால் இவ்வினத்தில் எதிரி தினகரன் ரூ.1,40,000/- கையாடல் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.10 17:46:09 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்